**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1061/2024 நாள்-13.03.2026

**வா.சா.1. பேச்சியம்மாள்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

இந்த வழக்கு தவிர வேறு யார் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் கவிதா, மாடத்தி, முனீஸ்வரி ஆகியோர்கள் மீது அ.வ.எண்.203/2023, 207/2023, 225/2023 ஆகிய வழக்குகளை கடனுறுதிசீட்டு சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மூன்று வழக்குகளும் தவறுகைக்காக இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். **நான் இந்த வழக்கை வழக்கறிஞருக்கு கட்டணம் கொடுக்க இயலாத காரணத்தினாலும் எனக்கு உரிய வருமானம் இல்லை என்ற காரணத்தினாலும் இலவச வழக்கறிஞர் நியமனம் செய்து தர வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனு கொடுத்ததின் பெயரில் இலவச வழக்கறிஞர் இலவச சட்ட உதவி மையம் மூலமாக நியமனம் செய்யப்பட்டு இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான்.** எனக்கு ரெங்கம்மாளை நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கார்த்திகா சகோதரி உள்ளார். கார்த்திகா ரெங்கம்மாள் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருகிறார் என் வீடு தொலைவில் உள்ளது என்றால் சரிதான் ரெங்கம்மாள் எனக்கு உறவுக்காரர் இல்லை என்றால் சரிதான். கார்த்திகா மூலம் தான் ரெங்கம்மாள் எனக்கு பழக்கம் என்றால் சரிதான் கார்த்திகா வாடகை வீட்டில் ரெங்கம்மாள் வசிக்கும் தெருவில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். கார்த்திகா வீட்டின் உரிமையாளர் பெயர் எனக்கு தெரியாது. 21.11.2021 அன்று பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். அன்று என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. மேற்படி கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானமோ வசதியோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கடன் கொடுக்கும் அளவிற்கு என்ன வருமானம் உள்ளது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.5 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு என்ன வருமானம் உள்ளது என்று கேட்டால் என் கணவர் இராணுவத்தில் பணிபுரிந்து வருவதால் என்னிடம் வருமான வாய்ப்பு உண்டு. என் அப்பாவின் சொத்தை என் அப்பா இறந்த பின்பு விற்று பாகத்தில் கிடைத்த ரூபாயை பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். அந்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த சொத்து முகவூரில்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

உள்ளது. அந்த சொத்தை என் அப்பா இறந்தபின்பு வாரிசு அடிப்படையில் வீரபுத்திரன் என்பவருக்கு 2020 ம் ஆண்டு 9 வது மாதம் கிரையம் கொடுத்தோம். கிரைய ஆவணம் எண் எனக்கு தெரியாது. என் அப்பாவின் சொத்தில் என் அம்மாவுடன் சேர்ந்து மொத்தம் 4 நபர்களுக்கு பங்கு இருந்தது மொத்தம் ரூ.20 லட்சத்திற்கு கிரையம் கொடுத்தோம் அந்த கிரைய ஆவணத்தில் சொத்தின் மதிப்பு ரூ.20 லட்சம் என்று காட்டப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு என் வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் போது சுப்புராஜ், சுரேஷ், கார்த்திகை செல்வி ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். சுப்புராஜ், சுரேஷ், கார்த்திகை செல்வி ஆகியோர்கள் உறவினர்கள் என்றால் கார்த்திகைசெல்வி மட்டும் தான் என் உடன்பிறந்த சகோதரி மற்ற இருவரும் ரெங்கம்மாள் வீட்டிலும் என் வீட்டிலும் வேலை பார்த்தவர்கள். பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் போது 1 மாதத்தில் திருப்பி தர வேண்டும் என்று கூறி தான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் இந்த விவரம் கடனுறுதிசீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் தங்கை ரெங்கம்மாளுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று ஒரு பிரச்சனை இருந்தது என்றால் இல்லை. கடனுறுதிசீட்டை சுரேஷ் என்பவர் எழுதினார். சுரேஷ் அப்பா பெயர் தெரியாது. இராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறார் தெரு பெயர் தெரியாது. ரெங்கம்மாள் சொல்ல சொல்ல சுரேஷ் கடனுறுதிசீட்டை எழுதினார். எனக்கு படிக்கத் தெரியும் எழுதத்தெரியாது. கடனுறுதிசீட்டில் சுரேஷ், சுப்புராஜ் கார்த்திகைசெல்வி ஆகிய 3 பேரும் கையொப்பம் செய்துள்ளார்கள். சுப்புராஜ்-ன் அப்பா பெயர் தெரியாது. இராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறார் தெரு பெயர் தெரியாது. சுரேஷ், சுப்புராஜ் என் வீட்டிற்கு வேலைக்கு வருபவர்கள் என்றால் சரிதான். கடனுறுதிசீட்டில் 3 பேருமே ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளார்கள். மற்ற விவரங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. கார்த்திகை செல்வி தமிழில் முகவரி எழுதியுள்ளார். சுப்புராஜ்-ம், சுரேஷ்-ம் ஆங்கிலத்தில் முகவரி எழுதியுள்ளார். 1 மாதம் கழித்து கடன் தொகையை திருப்பி கேட்டேன் பிரதிவாதி என்னை தகாத வார்த்தையால் பேசிவிட்டார். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. காவல் நிலையத்திற்கு என் தங்கை பிரச்சனைக்காக உதவிக்கு சென்றிருந்தேன். என் தங்கைக்கு எதிரானவர்களுக்கு ஆதரவாக பிரதிவாதி காவல் நிலையத்திற்கு வந்தார்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

என்றால் நான் பார்க்கவில்லை. பிரதிவாதி பணம் கொடுக்கவில்லை என்பதால் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். காலதாமதமாகத்தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் பிரதிவாதியின் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் ஒரு நபர் நான் வாங்கி தருவதாக கூறியதால் வழக்கறிஞர் அறிவிப்பு காலதாமதமாக அனுப்பினேன். 02.03.2021 அன்று பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டார். பிரதிவாதி பதில் அறிவிப்பு என் முந்தைய வழக்கறிஞருக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பு அனுப்பிய விவரத்தை பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் கூறப்பட்ட சங்கதிகளை பிராதில் குறிப்பிட்டால் அது என் வழக்கிற்கு பாதகம் அமையும் என்பதால் பதில் அறிவிப்பு பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. நான் 10 கட்டு ரூ.500/- தாள்களாக கொடுத்தேன். எனக்கு வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்து வதற்கு வசதி வாய்ப்போ வருமானமோ இல்லாத நிலையில் நான் மேற்படி நபர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் கடன் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தங்கைக்கும் வங்கி மேலாளர் சிவசெல்வத்திற்கும் நடந்த பிரச்சனையில் வங்கி மேலாளருக்கு ஆதரவாக பிரதிவாதி நடந்து கொண்டதால் பிரதிவாதி மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.